★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE : 55630

# நம் நாடு

ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: ஆடி 18உ வியாழன் (2—8—56) ★ ★ வெளியீடு: ஆடி 19உ வெள்ளி (3—8—56) [இதழ் 45

## பந்தயத்தில் தோற்றான் — பித்தனானான்!

### கிடைத்ததையெல்லாம் விழுங்கிய குடலில் டாக்டர் கண்ட 'அற்புதச் சாமான்கள்'

ஒரு மனிதனுடைய வயிற்றை 'ஆபரேஷன்' செய்து பார்த்த போது, அவனது குடலிலிருந்து 56 பல் துலக்கும் 'பிரஷ்'கள், 21 ஆணிகள், 13 கத்திகள், 20 பவுண்டன்பேனாக்கள், பென்சில்கள், வகைவகையான இரும்புப் பொருள்கள் முதலியன கண்டுபிடிக்கப் பட்டனவாம்!

(4-ம் பக்கம் பார்க்க)

# இராமன் பட எரிப்புப் போராட்டம்

## பலநாள் நடத்தத் திட்டமிட்டிருந்தார்; ஒரே நாளில் நிறுத்திக் கொண்டார்!

## பெரியார் கைதாகி விடுதலையானார்

### பலநூறு பேர் கைது செய்யப்பட்டு விடுதலையாகி வருகின்றனர்

### எரிப்புப் போராட்டம் முடிவுற்றதாகப் பெரியார் அறிக்கை

சென்னை, ஆக. 2—

*இராமன் பட எரிப்புப் போராட்டத்தையொட்டி சர்க்கார் சென்ற சில தினங்களாக சென்னை நகரிலும் மற்ற மாவட்டங்களில் முக்கிய நகரங்களிலும் முன்னேற்பாடான பாதுகாப்புகளைச் செய்து வந்தனர்; முக்கிய வீதிகளில் போலீசார் காவல் புரிந்துவந்தனர்.*

இப்போராட்டம் ஏறத்தாழ 15-நாட்கள் தொடர்ந்து நடைபெறும் என்று திராவிட கழகத் தலைவர் பெரியார் அவர்கள் திட்டமிட்டிருந்தார்; எனினும், ஒரே நாளில் இப்போராட்டத்தை நிறுத்திக் கொண்டதாகவும், தொடர்ந்து யாரும் இந்த வேலையில் இறங்க வேண்டாமென்றும் பெரியார், திராவிட கழகத் தோழர்களுக்கு அறிவித்துவிட்டார்.

இராமன் பட எரிப்பு தினத்தின் துவக்க நாளாகக் குறிப்பிடப்பட்டிருந்த 1—8—56 அன்று பெரியார், சென்னை கடற்கரையில் தமது போராட்டத்தை நடத்தப் போவதாக அறிவிக்கப்பட்டிருந்தது; அதற்காக நேற்று மாலை 4-45 மணிக்கு தமது இல்லத்தை விட்டுப் புறப்பட்டார்.

ஏற்கனவே தயாராக இருந்த போலீஸ் அதிகாரிகளால் பெரியார் கைது செய்யப்பட்டு, தங்கள் காரில் ஏற்றிக்கொண்டு போய் கமிஷனர் ஆபீசில் காவலில் வைத்தனர்; பெரியாருடனிருந்த தோழர் எஸ் குருசாமியும் கைது செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

சென்னை நகரில் எங்கெங்கு இராமர்பட எரிப்புப் போராட்டம் நடைபெறும் என்று விளம்பரப்படுத்தப் பட்டிருந்ததோ அங்கெல்லாம் போலீஸ் அதிகாரிகள் முன்னதாகவே சென்று தொண்டர்களைக் கைது செய்துவிட்டனர். சென்னை நகரில் 90 பேர் கைது செய்யப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

தமிழ் நாட்டின் மற்றும் பல பகுதிகளில் பல நூற்றுக்கணக்கானவர்கள் முன்னதாகவே கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப் பட்டனர்.

1-8-56 அன்று மாலை 4-45 மணிக்குக் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருந்த பெரியார் அவர்கள், அன்றிரவு 8-30 மணிக்கு விடுதலை செய்யப்பட்டார்.

உடனே அவர் விடுத்துள்ள செய்தியில், இராமன் பட எரிப்புப் போராட்டம் வெற்றியுற்று விட்டதாகவும், எனவே, பலநாள் தொடர்ந்து நடத்தயிருந்த போராட்டத்தை ஒரேநாளில் தாம் நிறுத்திவிட்டதாகவும், இனி திராவிட கழகத் தோழர்கள் யாரும் இந்த வேலையில் இறங்கவேண்டாமென்றும் அறிவித்துவிட்டார்.

பெரியாருடன் கைது செய்யப்பட்ட குருசாமியையும் பெரியாருடன் திருப்பி அனுப்பி விட்டனர்.

பெரியார் விடுதலையானதும் விடுத்த செய்தியையொட்டி, ஏற்கனவே கைது செய்யப்பட்டுள்ள தொண்டர்கள் அனைவரையும் விடுதலை செய்துவருவதாகவும் தெரிய வருகிறது.

## 7 இடங்களில் 800 பேர் கைது?

### திலகர் ஆண்டு விழா நாளில் தொண்டர்கள் கோரிக்கை

#### சிலைக்குக் கீழ் திலகர் பேத்தியின் தலைமையில் மகளிர் 'சத்தியாக்கிரகம்'

புனா, ஆக. 1—

புனா நகரின் முக்கியமான 7-இடங்களில் சத்தியாக்கிரகத்தை மேற்கொண்ட சம்யுக்த மகாராஷ்டிரத் தொண்டர்கள் 800 பேரை போலீசார் கைது செய்திருக்கின்றனர்.

லோகமான்ய திலகர் மறைந்த ஆண்டு விழா தினத்தன்று தங்கள் கோரிக்கைகளை வற்புறுத்துவதற்கென நகரில் ஊர்வலங்கள், சத்தியாக்கிரகங்கள் போன்றவற்றை மேற்கொள்ள வேண்டுமென்ற சம்யுக்த மகாராஷ்டிர சமிதியின் ஏற்பாடுகளின் ஒன்றாக மேற்படி சத்தியாக்கிரக நிகழ்ச்சி நடைபெற்றிருக்கிறது.

அதிகாலையில் இலேசான மழைத்தூறல் இருந்தபோதிலும் கூட, நகரின் பல பகுதிகளிலும் சம்யுக்த மகாராஷ்டிர சமிதியினர் சிறு சிறு ஊர்வலங்களாகச் சென்று, 'பம்பாய், சிபானி, பெல்காம், கார்வார் ஆகியவை மராட்டியத்துடன் சேர்க்கப்பட வேண்டும்' என்று ஒலிமுழக்கம் செய்திருக்கின்றனர்.

லோகமான்ய திலகரின் பேத்தியரான இந்து திலக் என்பாரின் தலைமையில் சென்ற பெண்கள் சத்தியாக்கிரகக் குழு ஒன்று, நகரின் மையத்திலுள்ள திலகர் சிலைக்குக் கீழ் கூடி சத்தியாக்கிரகம் செய்திருக்கின்றனர்.

பம்பாயிலிருந்து புனா திரும்பிய அகில இந்திய இந்து ராஷ்டிரிய பரிஷத்தின் பொதுச் செயலாளரான ஜி. தாட்டே என்பாரைப் போலீசார் கைது செய்துள்ளனர் என்றும், அன்று மாலை புனாவில் நேரு பண்டிதர் பேசவிருந்த பொதுக்கூட்டத்தில் அவருக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் நடத்துவதென அவர் அறிவித்திருந்தார் எனவும் கூறப்படுகிறது.

இன்று காலையிலிருந்து மாலை வரை, முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளாக 14 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும், அவர்களுள் இருவர் பல்கலைக் கழக மாணவத் தலைவர்கள் என்றும் கூறப்படுகிறது.

## நாட்டின் அபிவிருத்தியில் சாதுக்களின் பங்கு

புதுடில்லி, ஜூலை 31—

"இந்தியா முன்னேறிக் கொண்டே இருக்கிறது; ஆனால், அதன் அபிவிருத்தியும் முன்னேற்றமும், நாட்டிலுள்ள குடிமக்கள் ஒவ்வொருவரின் சொந்த முயற்சியையுமே பெரும் அளவு சார்ந்திருக்கிறது இந்த நாட்டை அபிவிருத்தி செய்வதில் சாதுக்களும் தங்கள் பங்கினைத் திறம்படச் செய்து முடிப்பார்கள் என்று நம்புகிறேன்."

என்று, பிரதமர் நேரு, தம்மைச் சந்தித்தச் சாதுக்கள் குழு ஒன்றிடம் கூறியுள்ளார்.

## பொது இடங்களில் மகளிர் சதிராட்டம்

### ஆந்திரம் தடை விதிக்கிறது

கர்னூல், ஜூலை 31—

பொது இடங்களில்—வீதிகளில், திருமண ஊர்வலங்களிலோ அல்லது மற்றெந்த ஊர்வலங்களிலோ 'தேவதாசி'ப் பெண்கள் ஆடக்கூடாது என்று தடை விதிக்கும் 'தேவதாசிச் சட்டம்' ஒன்றை ஆந்திர சர்க்கார் உருவாக்கி வெளியிட்டிருக்கிறது.

இச்சட்டம் நிறைவேற்றப்படுவதின் மூலம், இப்போது ஆந்திர மாநிலம் எங்கும் திருமண உற்சவங்கள் போன்றவற்றில் 'சர்வசாதாரணமாக, நடைபெற்றுவரும் பெண்களின் 'சதிராட்டம்' இனி மேல் நடைபெறாது.

பொதுமக்களின் கருத்தையொட்டியே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் சர்க்கார் குறிப்புக் கூறுகிறது.

## 'குருதியைச் சிந்தி சூயஸை காப்போம்'

### 'இராணுவ நடவடிக்கை ஏற்பட்டால் எதிர்த்துப் போராடுவோம்'

### எகிப்தியத் தலைவர் நாசர் அறிவிப்பு

கெய்ரோ, ஆக. 1—

"மேலை நாடுகளின் இராணுவ நடவடிக்கைகளுக்கு எதிராக எகிப்து, தனது இரத்தத்தைச் சிந்தியேனும் சூயஸ் கால்வாயைக் காக்கும்,"

என்று, கர்னல் நாசர், எகிப்த பல்கலைக் கழக இளைஞர்கள் கூட்டமொன்றில் தெரிவித்திருக்கிறார்.

#### 'எதிர்த்துப் போரிடுவோம்'

'சூயஸ் கால்வாய் பற்றிய உதவி ஒப்பந்தங்கள் எதையும் எகிப்து சர்க்கார் வரவேற்கும்—மதிப்பளிக்கும்,"

என்று, அவர் இதற்கு முன்னர் கூறியுள்ளார்.

'சூயஸ் கால்வாயை தேசிய மயமாக்கிவிட்டதினால் அங்கு நடைபெற்ற கப்பல் போக்குவரத்துக்கு எவ்விதப் பங்கமும் ஏற்பட்டுவிடவில்லை; அது, எகிப்தின் தேசிய நடவடிக்கைகளை எவ்வகையிலும் பாதிக்கவில்லை' என்றும் அவர் கூறியிருக்கிறார்.

'சூயஸ் கால்வாய் பிரச்சினையையொட்டி, மேற்கத்திய நாடுகள் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டால் எகிப்து என்ன செய்வதாக முடிவு செய்திருக்கிறது?' என்று ஜெர்மன் நிருபர் ஒருவர் கேட்டபோது, அவர் 'நாங்கள் எதிர்த்துப் போர்செய்வோம்' என்று பதிலுரைத்திருக்கிறார்.

#### பிரிட்டன் நடவடிக்கை ஆரம்பமாகிறதா?

லண்டன், ஆக. 1—

"கிழக்கு மத்திய தரைக்கடல் பகுதிகளில் உள்ள நிலைமையை மேலும் வலிவுபடுத்திக் கொள்ளவும், அங்கு ஏற்படக்கூடிய எந்த ஒரு சூழ்நிலையையும் கவனித்துக் கொள்ளத்தக்க திறமையைப் பெறவுமாக, இராணுவ நடவடிக்கைகள் போன்ற சில முன்னெச்சரிக்கையான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன" என்று பிரிட்டன் போர்க் காரியாலயச் செய்தி ஒன்று கூறுகிறது.

மத்திய தரைக் கடற் பகுதிகளில், அவசர நடவடிக்கைகளுக்கென இரண்டு விமானந் தாங்கிக் கப்பல்கள் நிறுத்தப்பட்டுள்ளனவாம்.

#### எகிப்துக்கு எதிராக அமெரிக்கா நடவடிக்கை

அமெரிக்காவில், எகிப்து சர்க்காருக்கும்—சூயஸ் கால்வாய் கம்பெனிக்கும் சொந்தமாக உள்ள சொத்துக்கள் அனைத்தும் கட்டுப்பாடுகளுக்குள் வைக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

## அகதி மாணவர்கள் கல்வி வசதி

### ரூ. 1-கோடி நிதி உதவி

புதுடில்லி, ஜூலை 31—

"அகதி மாணவர்கள் படிக்க வசதி அளிக்கும் கல்வி நிறுவனங்களுக்கு இதுவரை ஒரு கோடி ரூபாய் நிதி உதவியாக அளிக்கப்பட்டிருக்கிறது," என்று அகதிகள் புனருத்தாரண அமைச்சர் கூறியுள்ளார்.

"இந்த ஆண்டில், அகதிகள் கல்வி வசதிக்காக மத்திய அரசாங்கம் ஒதுக்கிய பணத்தில் ரூ 75 இலட்சம் இருக்கிறது; இந்தப் பணத்தைச் சிறந்த முறையில் செலவிடுவதற்கான யோசனைகளைத் தெரிவிக்குமாறு மாகாண அரசாங்கங்களைக் கேட்டுக்கொள்கிறேன் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

## கே. ஆர். இராமசாமி மலேயா பயணம்

சென்னை, ஆக. 2—

நடிப்பு - இசைப்புலவர் கே. ஆர். இராமசாமி அவர்கள், 3—8—56 வெள்ளி காலை 9-மணியளவில், மீனம்பாக்கம் விமான நிலையத்திலிருந்து பிரயாணமாகி, நாடகக் கலைப் பணியாற்ற மலேயா செல்கிறார்.

அவருடன் அவரது நாடகக் குழுவினரும், நண்பர்களுமாக 36 தோழர்கள்வரை உடன் செல்லுகிறார்கள்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

நம் நாடு

சென்னை 2-8-'56 வியாழன்

# பொதுச்செயலாளர் அறிக்கை

மக்களில் பெரும்பான்மையோரின் எதிர்காலத்தைப் பாதிக்கின்ற ஒரு நடைமுறையைக் கைக்கொள்ளுவதற்கு முன், அம்முறை பற்றி தங்கள் விருப்பு வெறுப்பைத் தெரிவிப்பதற்கு அம்மக்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டியதுதான் மக்களாட்சி ஏற்பாட்டில் உள்ள ஒரே ஒரு சிறந்த வழியாகும். அதை விடுத்து, ஆட்சிப் பொறுப்பில் இருப்பவர்கள்—எவ்வளவு செல்வாக்குப் பெற்றிருப்பவர்களாக இருந்த போதிலும்—மக்களை ஒதுக்கித் தள்ளி, தம் மனம்போன போக்கின்படி நடந்துகொள்ள முந்துவதை சனநாயகப் பண்பு எனக் கொள்வதற்கில்லை. மக்களை அலட்சியப்படுத்தி நடந்து கொள்ள முனையும் ஆட்சியாளர்களின் அச்செயலை எதேச்சாதிகாரமெனச் சொல்வதைத் தவிர்த்து, வேறு வகையில் சொல்வதற்கில்லை.

மக்களைக் குறித்து இதுவரை வாய் கிழியக் கத்திவந்த காங்கிரஸ் கட்சியினர், வர வர மக்கள் மீது நம்பிக்கை வைத்துச் செயல்பட அஞ்சுகின்றனர். தாங்கள் மேற்கொள்ளும் பணிகளுக்கு மக்கள் ஆதரவு இருக்குமோ இருக்காதோ என்ற சுரோட்டான எண்ணத்தினால், மக்களை புறக்கணித்து நடந்துகொள்ளுவதிலும், மக்களின் கண்களை மூடிவிட்டு செயல்படுவதிலும் பெருநாட்டம் உடையவர்களாக காங்கிரஸ் ஆட்சியாளர் மெள்ள மெள்ள மாறிவருகின்றனர்.

தங்கள் எதேச்சாதிகாரச் செயல்களுக்கு எதிராக அமைதியான முறையிலும், சட்டத்திற்கு உட்பட்டத் தன்மையிலும் பொதுக்கூட்டங்களோ, ஊர்வலங்களோ நடத்த முன்வந்தாலும், அவை குறித்துத் தாங்கள் ஏற்கனவே கூறிவந்த உயர்ந்த கருத்தில், அதாவது 'ஜனசக்தி' செயல்படுகிறது என்ற மேம்பட்ட போக்கில், அக்கிளர்ச்சிகளை காங்கிரஸ் ஆட்சியாளர்கள் எண்ணி நடக்க மறுக்கின்றனர். எதிர்ப்புக் கூட்டம், கண்டன ஊர்வலம் என்று கேள்விப்பட்டவுடன், ஆட்சியாளரின் கண்கள் சிவப்பேறிவிடுகின்றன. அறிவு குழம்பிவிடுகிறது. மக்களின் எழுச்சியை ஏசவும் பழித்துத் தூற்றவும் தங்களுக்குள் போட்டியிட்டுக் கொண்டு முனைகின்றனர். அத்தகு தூற்றும் பணியுடனும் ஆட்சியாளர்கள் மனநிறைவு பெறுவது கிடையாது.

ஆட்சியாளர்களை எதிர்க்க முனையும் மக்கள் எவ்வளவு அமைதியாகவும், ஒழுங்காகவும் தங்கள் அதிருப்தியைத் தெரிவித்துக் கொண்டபோதிலும், அவர்கள் கிளர்ச்சியால் அமைதிக்கு எந்த வகையிலும் கேடு நேராது என்ற நிச்சயம் இருந்த போதிலும், போலீஸ் படையை விட்டுத் தாக்கிப் படுகாயப் படுத்தியும், சுட்டுக் கொன்று குவித்தும், எதிர்க்கும் மக்களைப் பழிவாங்கினால் அல்லாது தங்களுக்கு மனநிம்மதி ஏற்படாது என்ற இடத்திற்குக் காங்கிரஸ் ஆட்சியாளர்கள் இன்று வந்திருக்கின்றனர். சட்டத்தின் பெயரால் செய்யப்படும் பலாத்காரச் செயல்களை ஏவி, மக்களின் மண்டைகளை உடைப்பதின் மூலமும், சுட்டுத் தள்ளுவதின் மூலமும், ஒருவகையான அச்சத்திற்கு மக்களை ஆளாக்கி விட்டுவிட்டால், என்றென்றைக்கும் தங்கள் எதேச்சாதிகாரத்திற்கு மக்களிடம் இருந்து எதிர்ப்பே கிளம்பாது என்ற முடிவில் ஆட்சியாளர்கள் நடந்துகொள்ளத் துணிந்துவிட்டார்கள்.

அதிகாரம் தங்கள் கைக்கு வருகிறவரையில், அதற்குப் பெரிதும் துணையாக இருந்த 'மக்கள் சக்தி'யை, வரைகடந்து சிறப்பித்துக் கூறிவந்த காங்கிரஸ்கட்சியினர், அதே 'மக்கள் சக்தி'யை அதிகாரத்தைக் காட்டி அச்சுறுத்துவதின் மூலமும், தடியையும் துப்பாக்கியையும் நீட்டி துன்புறுத்தி பயமூட்டுவதின் மூலமும், 'மக்கள் சக்தி'யை மட்டந்தட்டிவிடக்கூடும் என மனப்பால் குடிக்கின்றனர். முடிவில் ஏமாற்றம் உறுதி என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.

அதிகம் கூறுவானேன்? 'மக்கள் சக்தி'க்கு முன்னுள் தாங்கள் வைத்திருந்த மதிப்பை எல்லாம், இந்நாள் அதிகாரத்தில் இருக்கின்ற காரணத்தினுல் வாபஸ் பெற்றுக் கொள்ளப் பார்க்கின்றனர் காங்கிரஸ் ஆட்சியாளர்கள். எனவே, 'மக்கள் சக்தி'க்கு புதிய அகராதி எழுதுவதில் ஆட்சியாளர் ஈடுபட்டு உள்ளனர் என்றுதான் கூறவேண்டும்.

பஞ்சாப் ஒசியார்பூரில் மகா பஞ்சாப் கோரிய ஊர்வலத்தினர்மீது மிருகத்தனமாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்திருக்கிறது போலீஸ் எனக் குறைகூறப்பட்டது. அந்தத் தடியடி பிரயோகத்தை நீதிபதியைக் கொண்டு ஆராய்ந்தறிய வேண்டும் என மகா பஞ்சாப் கோரிக்கையினர் கோரினர்.

அக்கோரிக்கையை நிறைவேற்ற பஞ்சாப் ஆட்சியாளர் மறுத்துவிட்டனர். மறுத்ததுடன் போலீஸ் நடத்தையை ஆதரித்துப் பாராட்டவும் செய்தனர்.

காங்கிரஸ் பொதுச்செயலாளர் போலீஸ் தடியடியை விசாரித்தறியப் போவதாகவும், அவ்விசாரணை தன்மைத் தலைவராகக் கொண்ட குழு ஒன்று மேற்கொள்ளும் என்றும் அறிவித்தார். ஆனால் அவ்வாறு அறிவிக்கப்பட்ட இருபத்திநான்கு மணிக்குள்ளாகவே, அக்குழு செயல்படாது, விசாரணையும் மேற்கொள்ளப்படமாட்டாது என அபுல்கலாம் ஆசாத் அறிவித்தார்.

இருந்தாலும் காங்கிரஸ் பொதுச்செயலாளர் அறிவிப்புப்படி விசாரணை நடைபெற்று, குழுவின் அறிக்கையும் வெளிவந்துவிட்டது.

பெண்கள் என்றும் சிறுவர்கள் என்றும் பாராமல் ஓட ஓட விரட்டி அடித்தனர்—படுகாயப்படுத்தினர் — வீட்டுக்குள் சென்று ஒளிந்து கொண்டவர்களையும் வெளியில் இழுத்து வந்துத் தரையில் சாயுமவரையில் தாக்கினர்— பழிவாங்கும் போக்கில் பாய்ந்துத் தாக்கினர் —ஆட்களைக் குறித்து வைத்துத் தேடித்தேடிப் புடைத்தனர்— பெண்களின் போர்வையைப் பற்றி இழுத்தனர்—பெண்களின் சடைகளைப்பற்றி இழுத்தனர்—என்ற வேதனை தரும் செய்திகளின் பட்டியலாக காங்கிரஸ் பொதுச் செயலாளர் குழு அறிக்கை இருந்திடக் காண்கிறோம்.

வெளியூர்களில் இருந்து குண்டர்களை அழைத்துவந்து, அவர்களுடைய வயிறுகளை மதுக் குடங்களாக மாற்றி, மகாபஞ்சாப் ஊர்வலத்தினரை தாக்கிடச் செய்தனர் காங்கிரஸ் அமைச்சர்கள் என, ஊர்வலத்தினர் சார்பில் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

ஊர்வலத்தினரை ஒரு முச்சந்திக்குள் விரட்டி, வெளியேறும் மூன்று பாதைகளையும் அடைத்துக்கொண்டு, அமர்த்தப்பட்ட மதுப் படையினரும், போலீஸ் படையினரும் ஊர்வலத்தில் இருந்த மக்களை பலங்கொண்டமட்டும் தாக்கினர் எனவும் அங்குள்ள ஏடுகள் சித்தரித்திருந்தன.

'பழிவாங்கல்—மிருகத்தனம் — காட்டுமிராண்டித் தனம்! என்று காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள்கூடப் போலீஸ் தாக்குதலைக் கண்டித்திருந்தனர்.

'ஜாலியன் வாலாபாக் படுகொலை' 'பஞ்சாப் படுகொலை' என்றெல்லாம், காங்கிரஸ் ஆட்சியினரால் நடத்தப்பெற்ற இந்தச் செஞ்சாலை இரக்கமற்றச் செயல் வர்ணிக்கப்பட்டிருந்தது.

போலீஸ் மிருகத்தனத்தை பொதுச்செயலாளர் குழு அறிக்கை ஒப்புக்கொண்டு இருக்கிறது. ஆனால், பஞ்சாப் துணை மந்திரி அமரசிங் தூண்டுதலில் மதுப் படை வீரர்கள் போலீஸ் படைக்குத் துணையாக ஊர்வலத்தினரை தாக்கியதுகுறித்து அறிக்கை மவுனம் சாதித்துவிட்டிருக்கிறது. எப்பொழுதும் உண்மையை மறைத்தே பழக்கப்பட்டவர்கள், உண்மை என்றாலே வெறுக்கப் பழகிக் கொண்டு இருப்பவர்கள், இந்த வரையிலாவது உண்மையை ஒப்புக் கொள்ள முன்வந்தார்களே, அதுவே பாராட்டுதற்குரியதாகும்.

## கடன் கேட்கிறுர்கள்

சென்னை, ஜுலை 31—

சென்னை மாகில சர்க்கார் 100-க்கு ரூ. 4 வீதம் வட்டிக்கு ரூ. 15 கோடி கடன் வாங்க இருக்கிறார்கள். ரூ. 100 மதிப்புள்ள கடன பத்திரம் ரூ. 99-12-0க்கு விற்கப்படும்.

இந்தக் கடன் 12 ஆண்டுகளுக்குப் பின் திருப்பித் தரப்படும் என்றும், செப். 10-ந் தேதி கடன் பத்திரங்கள் விற்கப்படும் என்றும் தெரிகிறது.

ரூ. 15 கோடியில் பழைய கடன் பத்திரங்கள் ரூ. 2½ கோடிக்கு மாற்றிக்கொள்ளப்படலாம்.

## அடித்தது யோகம்!

### நிபந்தனையுடன் கோயில் குருக்களுக்கு விடுமுறை

ஆமதாபாத், ஜுலை 28—

ஆமதாபாத்தில் உள்ள சமணர்கள் கோவில்களில் உள்ள மத குருக்களுக்கு இனிமேல் ஆண்டு தோறும் சம்பளத்துடன் 40 நாட்கள் விடுமுறை அளிக்கப்படும். இவர்கள் வேலையிலிருந்து ஓய்வு பெறும்போது சன்மானத் தொகையும் அளிக்கப்படும்.

இங்குள்ள சமணர்கள் கோவில்களில் உள்ள 100 குருக்கள் தங்கள் தொழிற் சங்கத்தின் மூலம் இந்த உரிமைகளைப் பெற்றுள்ளனர்.

குருக்களுக்கு விடுமுறை அளிப்பதற்கு ஒரே ஒரு நிபந்தனை மட்டும் விதிக்கப்பட்டுள்ளது. விடுமுறையில் செல்லும் குருக்கள், பூசைகள் நின்று விடாதபடி பார்த்துக் கொள்ளும் பொருட்டு வேறு ஒருவரை பூசைகள் நடத்துவதற்காகத் தம்முடைய இடத்தில் வைத்துவிட்டுச் செல்லவேண்டும்.

## ரூ. 119 இலட்சம் நஷ்டஈடு தரப்படுமாம்!

### கோலார் தங்கவயல் பிரச்சினையில் முடிவு

பெங்களூர், ஜுலை 31—

கோலார் தங்கவயல் கம்பெனிகளுக்கு நஷ்டஈடு தொகையாக 119 இலட்சம் ரூபாயைத் தர மைசூர் மாகில சர்க்கார் முடிவு செய்துள்ளது; இந்திய சர்க்கார் இத்தொகைக்குச் சிபாரிசு செய்திருந்தது.

ஆரம்பத்தில் மாகில சர்க்கார் 87½ இலட்சம் ரூபாயை நஷ்டஈடாகத்தர முடிவு செய்திருந்தது என்றும், இதை இந்திய சர்க்கார் ஒப்புதலுக்கு அனுப்பினபோது, அவர்கள் ரூ 119 இலட்சம் நஷ்டஈடாகத் தரலாமென சிபாரிசு செய்தனரென்றும் கூறப்பட்டுள்ளது.

நஷ்டஈடு தொகை முழுவதையும் ரொக்கமாகத் தர வேண்டுமென சுரங்க கம்பெனியார்கள் கேட்டதில், ஒரு கணிசமான தொகைக்கு ரொக்கத்தையும் மீதியை பத்திரங்களாகவும் தருவதெனக் கூறப்பட்டுள்ளதாம்.

ஹரிசுச் சுரங்கத்தில் தற்போது உற்பத்தி அதிகரித்துள்ளதென்றும், இன்னும் 50 ஆண்டுகளுக்கு எடுக்கக்கூடிய தங்கம் இச்சுரங்கங்களில் இருப்பதாகவும் தெரியவருகிறது.

## 8,59,000 பேருக்கு வேலையில்லையாம்!

திருவனந்தபுரம், ஜுலை 31—

திருவாங்கூர்—கொச்சி மாகாணத்தில் எட்டரை இலட்சம் பேர் வேலையில்லாமல் பரிதவிக்கிறார்களாம்!

திருவாங்கூர்—கொச்சி மாகாணத்தில் படித்தவர்களிடையே நிலவும் வேலையில்லாக் கொடுமையை ஒழிப்பதற்கான வழிமுறைகளைக் கூற அரசாங்கம் நியமித்திருந்த குழுவினர், தங்கள் சிபாரிசுகளை அரசாங்கத்திடம் தெரிவித்துள்ளார்கள்.

ரூ. 212 இலட்சம் செலவில் தொழில் கூட்டுறவு அமைப்புகள் தொடங்கவேண்டும் என்றும் ரூ 22 கோடி செலவில் கூட்டுறவுத் தோட்டங்கள் ஏற்படுத்த 5 ஆண்டு திட்டம் வகுத்துச் செயலாற்ற வேண்டும் என்றும் குழு கூறியுள்ளது.

'திரு—கொச்சியில் 8,59,000 பேர் வேலையில்லாமல் திண்டாடுகிறார்கள்; இவர்களில் 8-ல் 1-பங்குப் பேர், படித்தவர்கள்" என் குழு மதிப்பிட்டுள்ளது.

---

மணிலா, ஜுலை 31—

பிலிப்பைனில் தளகிருக்கும் இராணுவ தளங்களைப் பற்றிய உரிமைப் பத்திரங்கள், உரிமைகள் எல்லாவற்றையும் இவ்வாரம் அமெரிக்கா கைவிட்டுவிடுமாம்.

## உள்நாட்டு நீர் நிலைப் போக்குவரத்து

### மத்திய சர்க்கார் பொறுப்பு ஏற்றுக் கொண்டதற்குக் காரணம்?

புதுடில்லி, ஜுலை 30—

சாமான்கள் போக்கு-வரத்தை இரயில்கள் மூலம் நடத்துவதால் நன்மை அதிகமா அல்லது ரோடுகள் வழியாக லாரிகள் மூலம் நடத்துவதால் நன்மை அதிகமா என்று ஆராய இந்திய சர்க்கார் ஒரு உயர்தர அதிகாரி குழுவை நியமிக்கலாம் என்று தகவல் கிடைத்துள்ளது.

சரியான முறையில் ரோடுகள் பயன்படுத்தப்படவில்லையாதலால், எல்லா மாவட்டங்களிலும் ரோடு போக்கு-வரத்துக்கு மாகில சர்க்கார்கள் ஊக்கமளிக்க வேண்டுமென்றும், சாமான்கள் போக்குவரத்தை சர்க்கார் மேற்கொள்ளும் யோசனையை 5 ஆண்டுகளுக்கு ஒத்திவைக்குமாறும் திட்டக் குழு முன்னர் கூறியிருந்தது என்று டாக்டர் கோஷ் தெரிவித்தார்.

இந்தியாவில் கால்வாய் போக்குவரத்து பற்றி டாக்டர் கோஷ் குறிப்பிடுகையில், பல கால்வாய்கள் உபயோகமற்ற நிலையில் இருப்பதாகவும், கால்வாய்ப் போக்குவரத்துமீது வரி விதித்தும்கூட இக்கால்வாய்களைப் பேண முடியவில்லை என்றும், இதனால்தான் உள்நாட்டு நீர்நிலை போக்குவரத்தை இந்திய சர்க்கார் தங்கள் பொறுப்பில் எடுத்துக்கொண்டுள்ளதாகவும் கூறினர்.

பக்கிங்காம் கால்வாயையும் மேற்குக் கடற்கரை கால்வாய்களையும் அபிவிருத்தி செய்து பராமரிக்கும் பொறுப்பை மத்திய சர்க்கார் மேற்கொண்டு இவைகளுக்காக முறையே ரூ 115 இலட்சம், ரூ 43 இலட்சம் செலவிடும் என்றும் தெரிவித்திருக்கிறுர்.

வேதாரண்யம் கால்வாயையும் அபிவிருத்தி செய்வது விரும்பத்தக்கது என்று சென்னை சர்க்காருக்கு திட்டக் குழு சிபாரிசு செய்யும் என்றும் டாக்டர் கோஷ் தெரிவித்தார்.

### சென்னையின் கோரிக்கை ஏற்கப்படுமா?

சென்னை, ஜுலை 31—

"அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ், நாடு முழுமையிலும் ஏற்படுத்தப்பட இருக்கும் மொத்த விசைத்தறிகளில் கால் பங்கை இந்த மாகிலத்துக்கு ஒதுக்க வேண்டுமென சென்னை மாகில சர்க்கார் கேட்டுள்ளதாகத் தெரிகிறது.

நாடு முழுவதிலும் மொத்தமுள்ள 28 இலட்சம் கைத்தறிகளில் 5,60,000 தறிகள் சென்னை மாகிலத்தில்தான் இருக்கின்றன என்ற அடிப்படைமீதே சென்னை சர்க்கார் இக்கோரிக்கையை விடுத்துள்ளதாகக் கூறப்படுகிறது.

2-வது திட்டக் காலத்தில் நாடு முழுவதிலும் 34,000 விசைத் தறிகள் ஏற்படுத்த ஊக்கமளிப்பதென இந்திய சர்க்கார் முடிவு செய்துள்ளதும், அதையொட்டி தோராயமாகக் கணக்கிடுவதாயிருந்தால் கூடச் சென்னைக்கு சுமார் 8,000 விசைத் தறிகள் ஒதுக்கப்பட வேண்டும் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது

### போக்குவரத்து இலாகா ஊழியருக்கு ஊதிய உயர்வு

#### தி. கொ. சர்க்கார் ஏற்பாடு

திருவனந்தபுரம், ஜுலை 31—

தி. கொ. மாகில போக்குவரத்து இலாகா சிப்பந்திகளின் சம்பள விகிதங்களை மாகில சர்க்கார் மாற்றியமைத்துள்ளனர். இதன்படி சுமார் 3,500 சிப்பந்திகளுக்கு சம்பள உயர்வு அளிக்கப்படும் என்றும், கடந்த ஏப்ரல் முதல் இச் சம்பள உயர்வு தரப்படும் என்றும் கூறப்படுகிறது. போக்குவரத்து விசாரணைக் குழு செய்துள்ள சிபாரிசுகள்படி இச்சம்பள உயர்வு தரப்படுகிறதாம்.

# தென்னாட்டில் சிறிய தொழில் வளர்ச்சி

## கூடுமான வரை ஊக்கமளிக்க திட்டக்குழு ஆவல்

புதுடில்லி, ஜூலை 30—

தென்னாட்டில் சிறிய தொழில்கள் வளர்ச்சிக்குக் கூடுமான வரையில் ஊக்கமளிக்க வேண்டும் என்று திட்டக் குழு ஆவலுடன் இருப்பதாகக் குழுவின் உறுப்பினர் டாக்டர் ஜே. சி. கோஷ் பார்லிமெண்ட் கமிட்டி கூட்டத்தில் தெரிவித்தாராம்.

தென்னாட்டில் தொழில் அபிவிருத்தி அதிகம் ஏற்பட வேண்டும் என்ற கோரிக்கை பற்றி அவர் குறிப்பிடுகையில், சர்க்கரை உற்பத்தித் தொழில் வருங்காலத்தில் விரிவாக்கப்பட வேண்டும் என்று ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது என்று கூறியிருக்கிறார்.

இராஜஸ்தானில் பழுப்பு நிலக்கரிச் சுரங்கம் கண்டுபிடிக்கவும், திரு-கொச்சியில் கனிப்பொருள்கள் வெட்டி எடுக்கவும் ஆராய்ச்சி நடைபெறும் என்றும் கூறியிருக்கிறார்.

மேலும், திரு-கொச்சியில் இரப்பர் தொழிற்சாலை ஒன்று நிறுவ வேண்டும் என்ற கோரிக்கை பற்றிக் குறிப்பிடுகையில், மோட்டார் டயர், 'டியூப்' தொழிற்சாலை ஒன்று தனியார் முயற்சியில் ஆரம்பிக்க தென்னிந்தியாவில் லைசென்சு வழங்கப்பட்டிருக்கிறது என்றும், இது நிறைவேறாவிட்டால் திரு-கொச்சி சர்க்காரே இதை மேற்கொள்ளலாம் என்றும் தெரிவித்திருக்கிறார்.

## வடாற்காட்டில் சர்க்கரை ஆலை?

நிறுவுமாறு மத்திய சர்க்கார் நிபுணர் சிபாரிசு

சென்னை, ஜூலை 31—

வடாற்காடு மாவட்டத்தில் அடுத்த ஆண்டிலிருந்தாவது சர்க்கரைத் தொழிற்சாலையில் வேலை ஆரம்பமாவதற்காக இயந்திர சாதனங்களுக்கு 'ஆர்டர்' கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கும்படி வடாற்காடு மாவட்டப் பிரதிநிதிகள், சர்க்கார் காரியாலயத்தில் விவசாய, ரெவின்யூ பொருளாதார அமைச்சர்களைச் சந்தித்துக் கேட்டுக்கொண்டார்கள் என்று தெரிகிறது.

கூட்டுறவு ரிஜிஸ்திரார் இது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கக் கேட்டுக்கொள்ளப்படுவார் என்றும் கூறப்படுகிறது.

மத்திய சர்க்கார் நிபுணர் ஒருவர் இயந்திர சாதன உற்பத்தியாளர்களுடன் பேச்சு நடத்துவதாகவும், வடாற்காடு மாவட்டத்தில் அதிகக் கரும்பு கிடைப்பதால் அங்கு ஒரு ஆலை—ஏற்கனவே மதுராந்தகத்திலும் உடுமலைப்பேட்டையிலும் நிறுவ இருக்கும் சர்க்கரை ஆலைகள் நீங்கலாக—நிறுவ, அந்நிபுணர் சென்னை சர்க்காருக்குச் சிபாரிசு செய்திருப்பதாகவும் தெரிகிறது.

## கீழ் பவானி பகுதியில் தொழில் திட்டம்

நெசவாளர்கள் நன்மைக்கு ரூ. 2 - இலட்சம்

கீழ் பவானி திட்டப் பகுதியில் பரீட்சார்த்தத் தொழில் திட்டத்திற்கான மாநில செயற் குழு கூடி, இந்தப் பகுதியின் அபிவிருத்திக்காக அங்கீகரிக்கப்பட்ட திட்டங்கள் பற்றி பரிசீலனை செய்தது.

பரீட்சார்த்தத் திட்டத்தின்கீழ் ரூ. 4 இலட்சம் செலவில் 18 திட்டங்கள் அனுமதிக்கப்பட்டன.

6 033 பேருக்கு வேலை கொடுக்கப்பட்டது. கதர் தொழில், மாதிரி இரும்புப் பட்டறை வேலை, அபிவிருத்தி செய்யப்பட்ட ஜின்னிங், பனை வெல்லம், தோல் சாமான்கள் செய்வது, வேப்பெண்ணெயிலிருந்து சோப் செய்வது, பனை நார் சாமான்கள் செய்வது, மாட்டு இலாடம் ஆணிகள் செய்வது ஆகிய தொழில்களுக்கு ஊக்கமளிக்கப்பட்டது.

நெசவாளர்களின் நன்மைக்காக ரூ 2 இலட்சம் செலவில் கைத்தறிகளுக்கான திட்டங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் 3 சாயத் தொழிற்சாலைகள் அமைக்கவும், நெசவாளர்களுக்குத் தறிகளும், துணைச் சாதனங்களும் விநியோகம் செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது. சுமார் 4,000 நெசவாளர்கள் இதனால் பயன் பெறுவார்கள்.

பதனீரிலிருந்து பனை வெல்லத்தை நவீன முறையில் தயாரிப்பதற்காக 188 சூளைகள் கட்டப்படுகின்றன.

## நூல் பற்றுக்குறை ஏற்படுமா?

'இடம் தரமாட்டோம்' என சர்க்கார் கூறுகிறது

புதுடில்லி, ஜூலை 31—

"நாட்டில் நூல் பற்றுக்குறை ஏற்பட்டுவிட சர்க்கார் எக்காரணத்தைக் கொண்டும் இடம் தராது" என டில்லி மேல் சபையில் பிரதமர் நேரு தெரிவித்திருக்கிறார்.

அம்பர் சர்க்கா மூலம் உற்பத்தி செய்யப்படும் எல்லா நல்ல ரக நூல்களையும் வாங்கிக்கொள்ள தொழில், வர்த்தக இலாகா உறுதியளித்துள்ளது என்றும், நூல் பற்றுக்குறை ஏற்படக்கூடிய ஒரு பெரும் ஆபத்து எதிர்நோக்கியிருக்கிறது என்றும், எனவே சர்க்கார், நூல் உற்பத்தியை அதிகரிக்க ஏற்பாடு செய்துள்ளனர் என்றும் கூறியிருக்கிறார் நேரு.

'இந்த ஏற்பாடுகளை எல்லாம் செய்த பிறகும் நூல் உற்பத்தி போதியதாக இருக்காது என நினைக்கிறேன்' என்று மேலும் அவர் கருத்தறிவித்திருக்கிறார்.

## போபாலில் பயிற்சி நிலையம் அமைப்பு

டிராக்டர் ஓட்டுவதற்குப் பயிற்சி அளிக்கப்படுமாம்

புதுடில்லி, ஜூலை 30—

நாட்டில் விவசாயத் துறையில் இயந்திரச் சாதனங்களை உபயோகிப்பதற்குப் பயிற்சி பெற்ற ஆட்கள் போதிய அளவு கிடைக்கும்படி செய்வதற்காக, போபாலைச் சேர்ந்த புதனி என்ற இடத்தில் டிராக்டர்களையும், இதர விவசாய சாதனங்களையும் உபயோகிப்பது பற்றிப் பயிற்சி அளிப்பதற்கான நிலையம் ஒன்றை இந்திய சர்க்கார் ஏற்படுத்தியிருக்கின்றனர். இந்நிலையத்தில் ஆண்டுதோறும் சுமார் 100 பேருக்குமேல் பயிற்சியளிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அந்நிலையத்தில் மாநில சர்க்கார்களால் தேர்ந்தெடுத்து அனுப்பப்படுபவர்களும், தனிப்பட்ட பண்ணை நடத்துபவர்களும் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். சொந்தப் பண்ணை நடத்துபவர்களும் இதில் அனுமதிக்கப்படுவார்கள்.

இப்பயிற்சிக்குக் கட்டணம் எதுவும் வசூலிக்கப்படமாட்டாது. அத்துடன் தேர்ந்தெடுக்கப்படும் ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் சாப்பாட்டுச் செலவுக்காக மாதத்துக்கு ரூ. 30 உதவிச் சம்பளம் கொடுக்கப்படும்.

## 6,000 தொழிலாளர்கள் வேலை நிறுத்தம்

விசாகப்பட்டினம், ஜூலை 30—

மச்சகுந்தா நீர்விசை மின்சாரத் திட்டத்தில் பணியாற்றும் சுமார் 6, ) தொழிலாளர்கள் கடந்த சனிக்கிழமை காலை முதல் வேலை நிறுத்தம் செய்துள்ளனராம்.

'ஆட்குறைப்பு' செய்யப்பட்டதை ஆட்சேபித்தே தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்வதாகக் கூறப்படுகிறது.

## தோப்பு மரங்கள்

கிராமச் செல்வம் பெருகுவதற்கு உதவுகின்றனவாம்

நிழலுக்காகப் பயிரிடப்படும் மரங்களும், தோப்புக்களும் கிராமச் செல்வம் பெருக உதவுகின்றன என்று வனத்துறை ஆராய்ச்சி நிபுணர்கள் கூறுகிறார்கள்.

தோப்புக்களால் வாடைக் காற்றைத் தடுத்து, விளை நிலங்களைக் காக்க முடியும். ஜப்பானில் கிழக்கு ஹொக்கைடோ பகுதியில் மூடுபனியால் வெள்ளாமை பாதிக்கப்படுவது சகஜமாக இருந்தது. அங்கு, குளிர்காற்றைத் தடுக்க வரிசையாக மரங்களை நட்டார்கள். மரங்கள் வளர்ந்த பிறகு, குளிர் காற்றின் வேகம் தணிந்ததுடன் மூடுபனித் தொல்லையும் மாறிவிட்டது. இப்போது அங்கு, பருவத்தில் சாகுபடி செய்வது சாத்தியமாகிவிட்டது.

இஸ்ரேல் நாட்டில் தோப்புக்களை ஏற்படுத்தியதால் சாகுபடி உயர்ந்திருப்பதாகவும், நிழல்தரும் பகுதி எல்லையில் உருளைக் கிழங்கு சாகுபடி செய்ததில் 11 சதம் கூடுதல் கிடைத்ததென்றும், தோப்புகள் ஏற்பட்டதால் தென் ரஷ்யாவில் கோடைகாலச் சாகுபடி அதிகரித்திருக்கிறது என்றும் கூறப்பட்டுள்ளது.

நிழல்தரும் மரங்களால் வெப்பநிலை மாறுவதுடன் மண்வளமும் மாறுவதாக நிபுணர் ஒருவர் கூறியுள்ளார். தோப்புக்களையொட்டிப் பயிரிடப்படுமிடங்களில் மகசூல் அதிகரித்திருப்பதாகவும், குறிப்பாக 'ஸ்ட்ராபெரி' என்ற பழம், திடனுகவும் சீக்கிரத்திலும் பழுத்துவிடுகிறதென்றும் அந்நிபுணர் குறிப்பிட்டுள்ளார்.

தோப்பு மரங்கள் வளர்ப்பதில், வேர்மூலம் மண்வளம் மாறுவதைப் பற்றி ஆலோசிக்கவும், அதனால் விவசாயத்திற்குக் கிடைக்கும் நன்மைகளைப் பற்றி ஆராயவும் திட்டமிடப்பட்டிருக்கிறது.

## கப்பல் கட்டும் துறை எங்கு அமையும்?

இந்தியாவில் இரண்டாவது கப்பல் கட்டும் துறையை எங்கே ஏற்படுத்துவது என்பது பற்றியும் இதை எந்தவகையில் அமைப்பது என்பது பற்றியும் நடைபெறும் பிரச்சினைகள் 1958-க்கு முன் முடிவாகிவிடுமென்று திட்டக் குழு உறுப்பினர் டாக்டர் கோஷ் தெரிவித்திருக்கிறார்.

# கீழ்த்திசை நாடுகளின் மொழிகளில் பயிற்சி பெற சோவியத் முயற்சி!

## அறிஞர்கள் பலர் மாஸ்கோ விரைவர்

## கற்றறிந்த மொழிகளில் நிபுணத்துவம் பெற அந்நாடுகளுக்கு செல்ல ரஷ்யர்களுக்கு வாய்ப்பு

மாஸ்கோ லோமோனோசோவ் பல்கலைக் கழகத்தில், கிழக்கு நாடுகளின் மொழிகள் கழகம் ஒன்று நிறுவப்பட்டு வருகிறது.

ஒவ்வொரு குறிப்பிட்ட நாட்டின் மொழியிலும் நல்ல தேர்ச்சியும், அந்நாட்டின் பொருளாதாரத்தையும், கலாச்சாரத்தையும் பற்றிய ஆழ்ந்த அறிவுமுடைய நிபுணர்களை இக்கழகம் பயிற்றுவித்துத் தரும்.

இக்கழகத்தின் சரித்திர — மொழியியல் இலாகாவில் செப்டம்பர் முதல் தேதியிலிருந்து பாடங்கள் ஆரம்பமாகும். ஆறு வருடப் பயிற்சியில் ஓராண்டு, வெளிநாடுகளில் நடைமுறை அனுபவம் பெறுவதற்காக ஒதுக்கப்படும். தனிப்பட்ட மாணவர்கள் இக்கழகத்தில் ஓராண்டிற்குப் பூர்வாங்கப் பயிற்சி பெற்ற பிறகு, உயர் கல்வி நிலையங்களில் சேர்ந்து தமது படிப்பைப் பூர்த்தி செய்து கொள்வதற்காக கீழ்த்திசை நாடுகளுக்கு அனுப்பி வைக்கப்படுவர்.

மக்கள் சீனக் குடியரசு, இந்தியா, இந்தோனேஷியா, வியட்நாம், பர்மா மற்றும் பல நாடுகளைச் சேர்ந்த கிழக்கு நாடுகள் சம்பந்தமான ஆராய்ச்சிகளை மேற்கொண்டுள்ள அறிஞர்கள், மாஸ்கோ பல்கலைக் கழகத்தில் போதிப்பதற்காக, சோவியத் நாட்டிற்கு வரவழைக்கப்படுவர்.

இக்கழகத்தைச் சேர்ந்த சாதாரண கல்லூரிப் பட்டத்திற்கு மேலான உயர் பட்டம் பெற்றவர்களும், பேராசிரியர்களும், விரிவுரையாளர்களும், தாம் தாம் கற்றறிந்துள்ள மொழிகளில் நிபுணத்துவம் பெறும் பொருட்டு, கீழ்த்திசை நாடுகளுக்கு நேரடியாகச் சென்று, அந்நாடுகளின் இலக்கியம், வரலாறு, பொருளாதாரம் ஆகியவற்றைப் படித்தறிந்து கொள்வதற்கு வாய்ப்பு அளிக்கப்படும்.

இவ்வாண்டு, பரீட்சார்த்த உயர்நிலைப் பள்ளி ஒன்றை மாஸ்கோவில் ஆரம்பிப்பதென முடிவு செய்யப்பட்டுள்ளது. இப்பள்ளியின் பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள மொழிகளில், சீன, இந்திய மொழிகளும் இடம் பெற்றுள்ளன.

## ஆண்டிற்கு 5,000 மோட்டார் சைக்கிள்

இந்தியாவில் உற்பத்தியாகுமாம்

புதுடில்லி, ஜூலை 30—

இந்தியாவில் மோட்டார் சைக்கிள்கள் தயாரிப்பதற்கான முயற்சி ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டிருக்கிறதென்றும், அதில் ஈடுபட்டுள்ள தொழிற்சாலை முழுமூச்சில் வேலைசெய்யும்போது ஆண்டிற்கு 5,000 மோட்டார் சைக்கிள் வீதம் உற்பத்தி செய்யுமென்றும், அது நாட்டின் தேவைக்குப் போதுமானதென்றும் மத்திய உற்பத்தித் தொழில் அமைச்சர் மக்கள் சபையில் தெரிவித்துள்ளார்.

## உங்களுக்குத் தெரியுமா?

இந்தியாவில் கால்நடைகள் தொகை கடந்த ஐந்தாண்டுகளில் 5 சதவிகிதத்திற்குமேல் அதிகரித்திருக்கிறது.

நடப்பு ஆண்டில் மொத்தம் 3,070 இலட்சம் கால்நடைகள் உள்ளன; 1951-ல், கால்நடைகள் எண்ணிக்கை 2,920 இலட்சம் இருந்தன; இதில் கோழி—வாத்துகளின் எண்ணிக்கை 974 இலட்சமாகும்; ஐந்தாண்டுகளுக்குமுன் இதன் எண்ணிக்கை 434 இலட்சமாகும்.

நடப்பு ஆண்டில் 1950 இலட்சம் மாடுகளும் 56 இலட்சம் வெள்ளாடுகளும், 448 இலட்சம் எருமைகளும், 387 இலட்சம் செம்மறி ஆடுகளும் உள்ளன. இதர 80 இலட்சம் பிராணிகளில் 15 இலட்சம் குதிரைகளும்—குதிரைக் குட்டிகளும் உள்ளன.

## ஐரோப்பாவிலேயே மிகப் பெரிய தொழிற்சாலை

அதில் பணியாற்றுபவர்கள் ஐந்து பேர்கள்தானும்!

பிரிட்டனில, க்ரெயின் தீவில் கட்டப்பட்டுள்ள எண்ணெய் சுத்திகரிப்புச் சாலையில் ஐந்தே ஐந்து தொழிலாளர்கள்தான் வேலை செய்கிறார்கள்.

அங்கு, தானே இயங்கும் இயந்திரங்கள் பொருத்தப்பட்டிருப்பதால் மனித உழைப்பு குறைந்துவிட்டது.

ஐரோப்பாவிலேயே மிகப்பெரியதான இத்தத் தொழிற்சாலையில் ஆண்டுக்கு 40,00,000 டன்கள் கச்சா எண்ணெய் சுத்தம் செய்ய முடியும்.

சில ஆண்டுகளுக்கு முன்பு இந்தத் தீவு சதுப்பு நிலமாக இருந்தது; இப்போது நவீன தொழிற்சாலையும், எண்ணெய்க் கப்பல்கள் ஒதுங்க ரேவு துறையும் ஏற்பட்டுவிட்டது.

மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து வரும் கச்சா எண்ணெய் இங்கு சுத்தம் செய்யப்படுகிறது.

# சோவியத் நாட்டில் பெண்களின் நிலை

## எல்லாத் துறைகளிலும் பங்கு பெற்றுள்ளனர்

ஆற்றிவரும் தொண்டிற்கு அரிய மதிப்பு

நாட்டு வாழ்க்கையின் சகல துறைகளிலும், அரசாங்க அதிகாரத்தின் சகல கிளைகளிலும் சோவியத் நாட்டின் பெண்கள் முக்கிய பங்கெடுத்து வருகின்றனர்.

348 பெண்கள் சோவியத் நாட்டின் சுப்ரீம் சோவியத் உறுப்பினர்களாகவும், 2,000-த்துக்கு மேற்பட்ட பெண்கள் யூனியன் குடியரசுகள், சுயாட்சிக் குடியரசுகளின் பிரதிநிதிகளாகவும், 5 இலட்சத்திற்கு அதிகமான பெண்கள் ஸ்தல சோவியத்து சபைகளின் உறுப்பினர்களாகவும் பணியாற்றி வருகின்றனர். 2,335 பெண்கள் மக்கள் நீதி மன்றங்களின் நீதிபதிகளாகவும், சுமார் 2 இலட்சத்து 34 ஆயிரம் பெண்கள் மக்கள் நீதி மன்ற ஆலோசகர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

இன்று சோவியத் நாட்டிலுள்ள டாக்டர்களில் 76 சதவிகிதமும், ஆசிரியர்களில் 70 சதவிகிதமும், எஞ்சினியர்கள், தொழில் நுட்ப நிபுணர்களில் ஏறத் தாழ 33 சதவிகிதமும், விவசாய நிபுணர்களில் 40 சத விகிதமும் பெண்களே ஆவர் என்பது குறிப்பிடத்தக்கது.

சோவியத் நாட்டின் பெண்கள் விஞ்ஞான, எஞ்சினியரிங் துறைகளில் புதிய கண்டுபிடிப்புகளை சாதித்து, அவற்றைச் செழுமைப்படுத்தி வருகின்றனர். இலக்கியம், கலை ஆகிய துறைகளிலும் அவர்கள் பெரும் பணி ஆற்றிவருகின்றனர். 81,590 பெண்கள் ஆராய்ச்சிப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்; 9,796 பெண்கள் விஞ்ஞானக் கல்லூரிப் பட்டங்களைப் பெற்றுள்ளனர்.

சோவியத் யூனியனில் பெண்கள் ஆற்றிவரும் தொண்டிற்கு நல்ல அங்கீகாரமும், மதிப்பும் அளிக்கப்படுகிறது. 10,61,546 சோவியத் பெண்களுக்கு சோவியத் யூனியன் பதக்கங்களும் விருதுகளும வழங்கப்பட்டுள்ளன என்பதும், 2,375 பெண்கள் 'சோவியத் யூனியன் வீரர்' பட்டமும், 'சோஷலிஸ்ட் உழைப்பு வீரர்' பட்டமும் பெற்றுள்ளனர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

48,313 பெண்களுக்கு மதிப்பிற்குரிய 'வீரத் தாய்' பட்டமும், 49,25,794 பெண்களுக்கு 'தாய் வீராங்கனை' விருதுகளும் பதக்கங்களும் வழங்கப்பட்டுள்ளன. பெரிய குடும்பங்களையுடைய தாய்மார்களுக்கும், தனியாக வாழும் தாய்மார்களுக்கும் யூனியன் வழங்குவதற்காக, 1955-ல் சோவியத் சர்க்கார் 490 கோடி ரூபிள் செலவிட்டது.

## மத்திய ஆப்பிரிக்காவில் நீர்—மின் நிலையம்

மத்திய ஆப்பிரிக்காவில் ஓடும் சாம்பசி நதியை, 'கரிபா' என்னுமிடத்தில் தடுத்து, நீர்-மின் நிலையம் அமைக்கத் திட்டமிட்டிருக்கிறார்கள். இந்தத் திட்டம் நிறைவேற 1,132 இலட்சம் பவுன்கள் செலவாகக்கூடும். திட்டம் நிறைவேறினால், உலகிலேயே இங்குதான் மிகவும் மலிவாக மின்சக்தி கிடைக்கும்; மத்திய ஆப்பிரிக்காவில் தொழில் வளமேற்படும்.

# ‘கண்மூடித்தனமாய் ஸ்டாலின் புகழ்பாடி வந்தனர்’

## ‘எதிர்பாராதவகையில் குழப்பத்தில் தள்ளப்பட்டுவிட்டனர்’

### ‘தங்கள் நடத்தையின் அடிப்படை தகர்ந்துவிட்டதே எனக் குழம்புகின்றனர்’

கம்யூனிஸ்டுகளின் பெருங்குழப்பம் குறித்து பண்டிதர்

“தற்போதைய ரஷ்யத் தலைவர்கள் ஸ்டாலின்மீது பழி சுமத்தி வருவதானது, வெளியுலகில் பெரிய மாறுபாடுகளை உருவாக்கியிருக்கிறது.

“ஸ்டாலின்மீது குறைகூறும் தற்போதைய ரஷ்யத் தலைவர்களின்போக்கு, இந்திய நாட்டுக் கம்யூனிஸ்டுகளிடையே பெருங் குழப்பத்தை விளைவித்துவிட்டிருக்கிறது. ஏனெனில் இந்நாட்டுக் கம்யூனிஸ்டுகள் அனைவரும் ஸ்டாலினைப் பற்றிப் புகழ்பாடுவதிலேயே தங்கள் முழுக் கொள்கைகளையும் உருவாக்கியிருந்தனர்.

“இந்நாட்டுக் கம்யூனிஸ்டுகள் இப்போதைய நிலையில் பெருங்குழப்பத்திற்கு ஆளாகிவிட்டிருக்கிறார்கள்; ஏனெனில் தங்கள் கொள்கைகளின் அடிப்படையே தகர்த்தெறியப்பட்டுவிட்டதை அவர்கள் உணர்ந்து கொண்டிருக்கிறார்கள்.

“ஸ்டாலின் புகழ்பாடும் தங்கள் பழைய கொள்கையை வைத்துக்கொண்டு, எப்படி தற்போதைய ரஷ்யாவின் புதிய கொள்கையை வரவேற்பது என்று தெரியாமல் திணறுகிறார்கள்,”

இவ்வாறு பிரதமர் நேரு, புனாவில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

இன்றைய நாட்களில் ரஷ்யா நடந்துசெல்லும் ‘திசை’ நல்ல திசையாகும் என்றும், தற்போதைய அதன் கொள்கைகள், மற்ற நாடுகளுடன் தனக்குள்ள உறவை விருத்தி செய்யக்கூடியவை என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்

மேலும், கம்யூனிஸ்டு நாடுகளை எதிர்ப்போரிடை, ரஷ்யாவின் தற்போதைய அபிவிருத்தி நிலைகள் நல்ல விளைவுகளை ஏற்படுத்தியிருக்கின்றன என்றும், உலகின் மற்றப் பகுதிகளிலும்கூட ‘நல்ல மாறுபாடுகள்’ நடைபெற்று வருகின்றனவென்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

## ‘மேலை நாடுகள் பலவீனத்தின் எதிரொலி!

சூயஸ் கால்வாய் பற்றிய எகிப்தின் நடவடிக்கை குறித்துபிரதமர்நேருவிளக்கம்

புனா, ஆக. 1—

“கடந்த ஒரு நூற்றாண்டுக் காலத்திற்கு மேலாக ஆசியாவிலும், மத்தியக் கிழக்குப் பகுதிகளிலும் நிலவிக்கொண்டிருந்த ஐரோப்பிய ஆதிக்கம் பலம் குன்றி வருகிறது என்பதையே, எகிப்து சர்க்கார், சூயஸ் கால்வாய் கம்பெனியை தேசிய மயமாக்கிய நடவடிக்கை எடுத்துக் காட்டுகிறது.”

என்று புனா பொதுக்கூட்டம் ஒன்றில் பேசுகையில் நேரு அவர்கள் கூறியிருக்கிறார்.

கிழக்கத்திய நாடுகளில்—குறிப்பாக ஆசியாவில் இப்போது ஒரு புதிய நிலைமை உருவாகி வருகிறது என்றும், நாம் இன்னும் முன்னேற வேண்டுமானால், உலகின் பல பாகங்களிலும் நடைபெற்று வரும் பல தரப்பட்ட மாறுபாடுகளைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

## ‘இந்திய வரலாற்றின் அவல முடிவு’

### ‘உங்கள் கோரிக்கை நியாயமானது’

‘நாடு முழுதும் உங்களுக்குப் பக்கபலமாக இருக்கிறது’

### பம்பாய் நகருக்கான கிளர்ச்சியை கைவிடாதீர் என மராட்டியர்களுக்கு அறிவுரை

புனா, ஆக. 1—

“பம்பாய் நகரம், பெல்காம், கார்வார் ஆகியவை உள்ளிட்ட சம்யுக்த மகாராட்டிரம் எங்கள் பிறப்புரிமை; அதை நாங்கள் அடைந்தே தீருவோம்.”

என்ற ஒலி முழக்கங்களை மேற்கொள்ளுமாறு என். சி. சாட்டர்ஜி. ஏ. கே. கோபாலன், எச். வி. காமத், எஸ். எம். ஜோஷி போன்றோர் உட்பட பல எதிர்க் கட்சித் தலைவர்கள், மகாராட்டிர மக்களைக் கேட்டுக்கொண்டிருக்கின்றனர்.

லோகமானிய கங்காதர திலகருக்கு அஞ்சலி செய்வதற்காக இங்கு நடைபெற்ற ஒரு மாபெரும் மக்கள் கூட்டத்தில்தான் அவர்கள் இவ்வேண்டுகோளை விடுத்திருக்கின்றனர்.

புனா ‘ரேஸ் கோர்ஸ்’ மைதானத்தில் பிரதமர் பண்டித நேரு அவர்கள் பொதுக்கூட்டம் ஒன்றில் பேசிக்கொண்டிருக்கையிலேயே மேற்குறிப்பிட்ட மாபெரும் மக்கள் அணிவகுப்பு நடைபெற்றது என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது.

“பம்பாய் நகரை மத்திய சர்க்காரின் நேரடி நிர்வாகத்தில் கொண்டுவர வேண்டுமென்ற முடிவானது இந்திய சரித்திரத்திலேயே ‘மிகப் பயங்கரமான முடிவு,” என்று அவர்கள் வர்ணித்திருக்கின்றனர்.

தங்கள் குறிக்கோள் வெற்றி பெறும்வரை, மகாராட்டிரர்கள் அனைவரும் சனநாயக முறைகளில் தங்கள் கிளர்ச்சிகளை வலுப்படுத்த வேண்டும் என்றும், நாடு முழுமையும் மகாராட்டிரரைப் பின்பற்றி நிற்கிறது என்றும், ஏனெனில் மகாராட்டிரரின் கோரிக்கை அனைத்தும் நியாயமானவை என்றும் அவர்கள் கூறியிருக்கின்றனர்.

# இந்தியா முழுமையிலும் பின்தங்கிய வகுப்பினர் 7,50,00,000 பேர்களாம்!

## வசதிகள் செய்துதர ரூ. 90 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறதாம்

சென்னை மாநிலத்திற்கு தரப்படும் தொகை எவ்வளவு?

சென்னை, சூலை 31—

இந்தியா முழுமையிலுமுள்ள பின்தங்கிய வகுப்பினர் 7,50,00,000 பேர் என்றும், முதல் திட்டத்தில் இவர்களுக்காக ஒதுக்கப்பட்டது ரூ. 39 கோடி என்றும், இப்போது ரூ. 90 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

சென்னை மாநிலத்தின் மொத்த மக்கள் தொகையான 3,68,00,000–த்தில் தாழ்த்தப்பட்ட வகுப்பினர், பின்தள்ளப்பட்ட மலைசாதியினர், முன்னாள் குற்றப் பரம்பரையினர் 62,69,000 பேர்களாம்!

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் சென்னை மாநிலத்தில் பின்தங்கிய வகுப்பினரின் வசதிகளுக்காக, மத்திய சர்க்காரின் மானிய உதவித் திட்டத்தின் கீழ் ரூ. 6 கோடி செலவிடப்படும் என்று தெரிகிறது.

தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு ரூ. 395 இலட்சமும், மலை சாதியினருக்கு ரூ 58 இலட்சமும், முன்னாள் குற்றப் பரம்பரையினருக்கு ரூ. 66 இலட்சமும் பின்தங்கிய வகுப்பினருக்கு ரூ 68 இலட்சமும் ஒதுக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது

முதல் வருடத்தில், தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு வீடு கட்டித்தரும் திட்டத்திற்காக ரூ 18 இலட்சம் செலவில் 5,000 வீடுகளும், ரூ 1 இலட்சம் செலவில் முன்னாள் குற்றப் பரம்பரையினருக்கு 200 வீடுகளும் கட்டித்தரப்படுமாம்.

வீடு கட்டித்தரும் திட்டத்தைத் தவிர தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு உபகாரச் சம்பளம், மத்தியான சாப்பாடு, தங்கும் விடுதிகளுக்கான ஏற்பாடுகள் ஆகியவற்றிற்காக ரூ 48 இலட்சமும், இதே ஏற்பாடுகளுக்காக முன்னாள் குற்றப் பரம்பரையினருக்கு ரூ. 55 இலட்சமும் செலவு செய்யப்படும்.

மேலும், குடிசைத் தொழில் திட்டத்தின்கீழ், ரூ. 70,000 செலவில் 3 மத்திய செருப்புத் தயாரிக்கும் நிலையங்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்குச் செலவிடப்படும் மென்றும், தச்சு வேலை, நெசவு வேலை முதலியவற்றில் பயிற்சிக்கென முன்னாள் குற்றப் பரம்பரையினருக்கு ரூ. 1·1 இலட்சமும், தீண்டாமையை ஒழிக்க — தீண்டாமை ஒழிப்புப் பிரச்சாரத்திற்காக ரூ. 1·5 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளனவென்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## பத்திரிகைகளிடை நேர்மையற்ற போட்டி

பக்க-விலையைக் கட்டுப்படுத்த மசோதா பிரேரபணை

பத்திரிகைகளின் சுதந்திரத்தைப் பாதுகாக்கவும் தரத்தை அபிவிருத்தி செய்வதற்கும் பத்திரிகைக் குழு ஒன்று நிறுவுவது சம்பந்தமாகவும், பக்கங்களுக்குத் தகுந்தபடி பத்திரிகைகளின் விலையைக் கட்டுப்படுத்தவும் பத்திரிகைகளுக்கு இடையே நேர்மையற்றப் போட்டியைத் தவிர்க்கவுமாக இரண்டு மசோதாக்களை மாநிலங்கள் சபையில் ஒலிபரப்பு மந்திரி பிரேரேபித்திருக்கிறார்.

பத்திரிகைக் குழு செய்துள்ள சிபாரிசுகளை அமுல் நடத்துவதற்காகவே மேற்குறிப்பிட்ட மசோதாக்கள் கொண்டுவரப்பட்டிருக்கின்றன என்று கூறப்படுகிறது

பத்திரிகைகளின் உயர்ந்த பட்ச அல்லது குறைந்த பட்ச பக்கங்கள் சம்பந்தமாக விலையை ஒழுங்குபடுத்தவும், பிரசுரம் செய்யப்படும் செய்திகளைப் பொறுத்து விளம்பரங்கள் போடும் இடத்தைக் கட்டுப்படுத்தவும் மசோதா, சர்க்காருக்கு அதிகாரமளிக்கிறது

வெளிநாடுகளில் உருக்குத் தொழில் நுட்பப் பயிற்சியளிப்பதற்காக இதுவரையில் 159 என்ஜினீயரிங்பட்டதாரிகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்; அவர்களில் 79 பேர் ஏற்கனவே மேற்கு ஜெர்மனிக்குப் போய்விட்டனர்.

* * *

# தி. மு. க. தேர்தல் நிதி துவக்கவிழா

5—8—56 ஞாயிறு காலை 9 மணிக்கு

## சென்னை கோகலே மண்டபத்தில்

★

தலைவர் :

### தில்லை-வில்லாளன்

பேசுவோர் :

# அண்ணா

## டி. கே. பொன்னுவேலு

★

நன்கொடை : ரூ. 5, 3, 2

—தி. மு. க.—மாணவர் கிளை

* * *

## கழகக் கூட்டம்

★

ஏனாதிமங்கலம் :
(திருவெண்ணெய்நல்லூர்)
3—8—56 மாலை 6 மணிக்கு
தலைவர் :
அ. கண்ணன்
பேசுவோர் :
என். வி. நடராசன்
என். சீவரத்தினம்
இரா. சாம்பசிவம்

★

கோனூழாம்பள்ளம் :
பந்தடித் திடலில்
4—8—56 மாலை 6 மணிக்கு
தலைவர் :
பொ. சின்னத்தம்பி
பேசுவோர் :
டி. கே. சீனிவாசன்
பொ. தருமன்
என். அசோகன்
கோ. சி. மணி
ரே. சக்திவேல்

## சேலம் மாவட்ட தி. மு. கழகக் கூட்டம்

★

‘சேலம் மாவட்ட தி. மு. கழகக் கூட்டம் 6—8—56 மாலை 3-மணிக்கு சேலம், கோயம்புத்தூர் லாட்ஜ், சாந்திநிகேதனில் நடைபெறும். எல்லா மாவட்டப் பிரதிநிதிகளும் தவறாது வரவேண்டுகிறேன,”

என்று, சேலம் மாவட்ட தி. மு. க துணைச்செயலாளர் பி. இராமலிங்கம் அவர்கள் அறிவிக்கிறார்.

### ஆலந்தூர் தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம்

4—8—56 இரவு 8-30 மணியளவில், ஆலந்தூர் தி மு. கழக அலுவலகத்தில், கழகச் செயற்குழுக் கூட்டம் நடைபெறும் அதுபோது முக்கிய பிரச்சினைகள் பல ஆய்வுக்கு வரும்.

### திருப்பரங்குன்றம் திராவிடர் பகுத்தறிவு மன்ற 3வது ஆண்டு விழா

4—8—56 மாலை 6 மணியளவில், மேற்படி மன்ற 3-வது ஆண்டு விழா, திருப்பரங்குன்றத்தில் நடைபெறும். தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் பேசுவார்.

### சென்னை மணி அரசு மாணவர் மன்றம்

சென்னை சபாநாயகர் இல்லத்தின்கண் நடைபெறும் மணி அரசு மாணவர் மன்றத்தில், 3—8—56 மாலை 6-30 மணிக்கு, தோழர் ஐ எஸ் இராமச்சந்திரன் தலைமையில், ‘நாட்டுக்குத் தொண்டு புரிபவன் போர் வீரனா? புலவனா?’ என்பது குறித்துத் தோழர்கள் க. இளங்கோ, எ. ஜெகநாதன் ஆகியோரும் மற்றும் பலரும் சொற்பொழிவாற்றுவர்.

### சொற்பயிற்சிக் கூட்டம்

3—8—56 மாலை 6-மணியளவில், சென்னை 11-வது வட்ட தி. மு கழகப் பணிமனையில், (எண் 4/88-எ, பிராட்வே சென்னை), தோழர் சு. அன்புக்கரசு தலைமையில், ‘மதமும் மக்களும்’ என்ற தலைப்பில் தோழர்கள் பலர் பேசுவர்.

### பந்தயத்தில் தோற்றான்...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

இந்த அதிசயச் சம்பவம் தென் ஜப்பானில் டெபேட்டா எனும் நகரில் நடைபெற்றிருக்கிறது. ஒரு நாள் அம்மனிதன், நடுத் தெருவில் பேச்சுமூச்சற்று மயங்கி விழுந்துவிட்டபோது ஒரு மருத்துவர் அவனைத் தூக்கிச்சென்று பரிசோதனை செய்தாராம்; அப்போதுதான் இந்த உண்மை கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

கடந்த ஆண்டில் நடைபெற்ற ஒரு பந்தயத்தில் அவர் தோற்றுப் போன பின்னர், பித்துப் பிடித்து அம்மனிதன் அலைந்து திரிந்ததாகவும், கையில் கிடைத்த பொருட்களையெல்லாம் அப்படியே விழுங்கிவிடுவதாகவும் அவருடைய உறவினர்கள் சிலர் தெரிவித்தனராம்!

### ஒத்திவைப்பு

“சென்னை 16-வது வட்ட தி.மு. கழகம் வாரந்தோறும் நடத்துவதாயிருந்த ‘தேர்தலும் மக்களும்’ என்ற பிரச்சாரத்தை நகரில் உள்ள தடை உத்தரவு காரணமாக இரு வாரங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது; தடை நீங்கியதும் தொடர்ந்து நடைபெறும்” என்று 16-வது வட்ட தி மு. க. செயலாளர் போளூர் பத்மநாபன் அறிவிக்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.